புதுச்சேரி அரசு
**வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறை**
**கூடுதல் வேளாண் இயக்குனர் (தோட்டக்கலை) அலுவலகம்**
**தாவரவியல் பூங்கா, புதுச்சேரி**
*****

<u>செய்திகுறிப்பு</u>

புதுச்சேரி அரசு வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறை, தோட்டக்கலை பிரிவில் உள்ள மத்திய அரசின் தேசிய தோட்டக்கலை இயக்கம் (NHM) மூலமாக தோட்டக்கலை பயிர்கள் சாகுபடி செய்யும் விவசாயிகளை ஊக்குவிக்கும்வண்ணம் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது.

இவ்வகையில் மகளிர் மற்றும் இளைஞர்களுக்கு சுயவேலை வாய்ப்பினை உருவாக்கிடவும் அவர்களுடைய வேளாண் சார் வருமானத்தை ஈட்டி வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கத்தோடும் 2021-22 ஆண்டிற்கான காளாண் உற்பத்திக்கூடம் அமைத்தல் (Mushroom Production Unit) மற்றும் காளாண் விதை உற்பத்திக்கூடம் அமைத்தல் (Spawn Production Unit), பசுமைக்குடில் (Poly House) மற்றும் நிழல் வலைக்குடில் அமைத்தல் (Shade Net House) மற்றும் பேக் ஹவுஸ் (Pack House) ஆகிய கட்டமைப்பு உருவாக்குவதற்கான கடனுடன் இணைக்கப்பட்ட பின் மானியம்/மூலதன செலவினத்தில் மானியம் பெறுவதற்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

இவ்விண்ணப்பங்களை தாவரவியல் பூங்காவில் இயங்கும் கூடுதல் வேளாண் இயக்குனர் (தோட்டக்கலை) அலுவலகம் மூலமாகவோ அல்லது வேளாண் துறையின் இணையதளம் (https://agri.py.gov.in) மூலமாகவோ பதிவிறக்கம் செய்து, பூர்த்தி செய்த விண்ணப்பங்களை வரும் (21.01.2022) தேதிக்குள் மேற்கண்ட அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

(சி. சிவராமன்)
**கூடுதல் வேளாண் இயக்குனர் (தோட்டக்கலை)**